முச்சந்தி முரளி



"இப்பிடியே குடும்பிப்பிடி சண்டை போடத்தான் எங்கட ஆக்களுக்கு தெரியும்"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 293

சனிக்கிழமை
14 செப்ரெம்பர் 2024

# புதிய ஜனாதிபதியுடனேயே மூன்றாம் கட்ட மீளாய்வுகள்

## ஐ.எம்.எப். திட்டவட்டம்

**கொழும்பு, செப்ரெம்பர் 14**

**இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே இலங்கை தொடர்பான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது மீளாய்வு நடைபெறும் என்றும் இலங்கை மக்களின் அபிலாஷைகளுடன் இணைந்து செயற்படத் தயார் என்றும் சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.**

11



## தெல். துர்க்காதேவிக்கு இன்று தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், செப். 14
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது.

11

## 18 ஆம் திகதியுடன் பரப்புரை நிறைவு!

கொழும்பு, செப். 14
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்துப் பரப்புரை நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவுபெறவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

11

## தமிழ்ப் பொதுவேட்பாளர்

### அரசியல் தற்கொலையே

யாழ்ப்பாணம், செப். 14
தமிழ்ப் பொதுவேட்பாளர் என்கிற அரசியல் தற்கொலை நிகழ்ச்சி நிரலில் இருந்து தமிழ் மக்கள் காப்பாற்றப்படவேண்டு

11

### அறத் தெரிவே

கொழும்பு, செப். 14
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளமையானது அரசியல் அறத்

11

## திலீபனை அஞ்சலிப்பதற்கு தடைகோரினர் பொலிஸார்!

யாழ்ப்பாணம், செப். 14
தியாகதீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளை முன்னெடுப்பதற்குத் தடை விதிக்குமாறு, யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றையதினம் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.
திலீபனின் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், நல்லூரில் இடம்பெறவுள்ள அஞ்சலிப்பு நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கவேண்டும் என்று கோரியே பொலிஸார் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் மற்றும்

11

## ஜனாதிபதி ரணில் யாழ். வருகின்றார்

கொழும்பு, செப். 14
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.
ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், தமிழர் பகுதிகளை இலக்குவைத்து ஜனாதிபதி வேட்பாளர்கள்

11

## நவம்பர் 25இல் உ/த பரீட்சை

கொழும்பு, செப். 14
2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகப் பரீட்சைகள்

11

### அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

## சங்கானை நபருக்கு ரூ. 25 இலட்சம் பரிசு

யாழ்ப்பாணம், செப். 14
தேசிய லொத்தர் சபையின் மகாஜன சம்பத சீட்டிழுப்பு மூலம் சங்கானையைச் சேர்ந்த நபரொருவர் 25 இலட்சம் ரூபாவை வென்றுள்ளார். வெற்றி இலக்கங்கள் ஆறு பொருந்தியதனால்

11

## சஜித் நாளை யாழ். வருகை

கொழும்பு, செப். 14
ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகைதரவுள்ளார்.

11

## பொலிஸ் அலுவலர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 14
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில், தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

11

## மிலேச்சத்தனம் மீண்டும் தலைதூக்க எத்தனிப்பு!

### சஜித் நேற்று விளாசல்

கொழும்பு, செப். 14
நாட்டில் மீண்டும் வன்முறை தலைதூக்குகின்றது. மக்களுக்கு பேச்சுரிமையும் அரசியல் உரிமையும் இல்லாது செய்யப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் தற்பொழுது வன்முறையும் மிலேச்சத்தனமும் பயங்கரவாதமும் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்

11



• வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானத்திற்கான சர்வதேச நிதியளிப்போர் மாநாடு நடைபெறும்.
• 13 வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துதல்.

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அல்லாடியபோது அநுர, சஜித் எங்கிருந்தனர்?

## ஜனாதிபதி ரணில் கேள்வி



கொழும்பு, செப். 14

**உரங்களின் விலைகளைக் குறைப்பதாகவும் மக்களின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகவும் அள்ளி வீசும் வாக்குறுதிகளுடன் இப்போது வரும் அநுரவும், சஜித்தும் மக்கள் நெருக்கடியில் தவித்தபோது எங்கிருந்தனர்? மக்களின் கஷ்டங்களை வேடிக்கை பார்ப்பது சுயநலமே.**

- இவ்வாறு கல்முனை, சாய்ந்தமருது விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயக் கடன்களை வெட்டிவிடுவதாக அறிவிக்கும் சஜித்தும் அநுரவும் இந்நாட்டு விவசாயிகள் உரமின்றி தவிக்கும்போது எங்கே இருந்தார்கள். நாம் உலகத் தலைவர்களுடன் பேசி உர மானியங்களைப் பெற்றுக்கொடுக்க பாடுபட்டதன் காரணமாகவே விவசாயிகள் மீண்டும் வயலுக்குள் இறங்கினார்கள். மக்கள் கஷ்டப்படும்போது ஓடியவர்களே இன்று அவர்களின் எதிர்காலத்துக்காக அதிகாரம் கேட்கின்றனர். போகும் இடங்களில் எல்லாம் எல்லாவற்றையும் இலவசமாகத் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது தான் மக்களைப் பற்றி நினைவு வந்ததா? அன்று பயந்தோடியவர்கள் அவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இன்று மீண்டும் வந்திருக்கிறார்கள்.. நான் மக்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தேன்- என்றார். (ச)

## சொந்தத் தேவைக்கு சிலிண்டர் எடுத்துச்செல்ல எந்தத் தடையுமில்லை

கொழும்பு, செப். 14

சொந்தத் தேவைக்காக காஸ் சிலிண்டர் கொண்டு செல்வதற்கு எதுவித தடையுமில்லை என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தேர்தல் பரப்புரை தொடர்பான வழிகாட்டுதல்கள் பற்றிய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிலர் குழுவாக காஸ் சிலிண்டர்களை தமது மோட்டார் சைக்கிள்களில் கட்டிக்கொண்டு பேரணியாகச் செல்ல முயன்றபோது புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## பலவந்த '13' ஐ ஏற்க முடியாது!

### பொன்சேகா கருத்து



கொழும்பு, செப். 14

நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வழங்கப் போவதில்லை என்று சுயாதீனவேட்பாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு தெற்கு மக்களின் ஆசீர்வாதம் இருக்கவில்லை. அது பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். குறித்த ஒப்பந்தம் நடைமுறையாக்கப்பட்ட விதத்தை நானும் அனுமதிக்கவில்லை. 13 வழங்கப்படும் என சஜித் கூறுகின்றார். நான் ஜனாதிபதியாகும் பட்சத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை- என்றார். (ஓ-44)

## கடைசித்தாவல்கள் நாளை ஆரம்பம்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், கடைசிக் கட்டத் தாவல் எதிர்வரும் 15 மற்றும்16 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதென தெரியவருகின்றது.

இதன்படி ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சஜித் பக்கம் தாவவுள்ளார் எனவும், சஜித் கூட்டணியில் உள்ள மாகாண மட்டத்திலான அரசியல் பிரமுகர்கள் சிலர் ஜனாதிபதி பக்கம் சாயவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது. இதற்கான பேச்சுகள் எல்லாம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் டம்மி வேட்பாளர்களாக களமிறக்கப்பட்ட சிலரும் பிரதான வேட்பாளர்களை ஆதரிக்கும் அறிவிப்பை கடைசி நேரத்தில் வெளியிடுவதற்கு தயாராகி வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பரப்புரைகள் முடிவடைவதற்கு இன்னும் 4 நாள்களே எஞ்சியுள்ளன. (ஓ-44)

## வாக்களிக்கும் சரியான முறை

### ஆணைக்குழு விளக்கம்



கொழும்பு, செப். 14

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் வாக்கை எவ்வாறு சரியாக அளிக்கவேண்டும் என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.

அதன்படி ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது, வாக்கை '1' என்றும் விருப்பு வாக்குகளை '2' மற்றும் '3' என்றும் குறிக்கலாம்.

ஒரு வாக்கை மட்டும் அளிப்பதற்கு, '1' அல்லது 'X' எனக் குறிக்கலாம்.

எனினும், ஒரு வாக்கை அளிக்கும் போது '1' மற்றும் 'X' என்ற இரண்டையும் குறிக்கவேண்டாம்.

'X' அடையாளம் இட்ட பின்னர் வேறு எந்த எண்ணையும் பயன்படுத்த வேண்டாம்.

சரியான முறையில் வாக்களிக்காவிடின் வாக்குகள் நிராகரிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ச)

## வெற்றிக் களிப்பில் அநுரகுமார



கொழும்பு, செப். 14

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில், தனது வெற்றி உறுதியாகியுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அடுத்த தனது அரசாங்கம் எவ்வாறு செயற்படும் என்ற வகையில் அவர் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார்.

மற்றவர்களைப் பாதிக்காத வகையில், தனது வெற்றிக் கொண்டாட்டத்தை வெளிப்படுத்தப் போவதாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)



## வாக்களிப்பின்போது கைபேசிக்குத் தடை

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களுக்குக் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

தபால்மூல வாக்களிப்பின்போது குறித்த வாக்குச் சீட்டை படமெடுத்து சமூகவலைத்தளங்களில் பதிவு செய்த நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையிலே, வாக்களிப்பு நிலையங்களுக்குக் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச் செல்வதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச)

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் 9 நாடுகளிலிருந்து வருகை

கொழும்பு, செப்.14

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 9 நாடுகளிலிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அழைப்புக்கிணங்க அவர்கள் வருகை தந்துள்ளதாக அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதில் சார்க் வலய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய கண்காணிப்பாளர்களும் இந்தக் கண்காணிப்புக் குழுக்களில் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலையீடின்றிய அனைத்துத் துறை சேவை

## சஜித் பிரேமதாஸ உறுதியளிப்பு



**கொழும்பு, செப். 14**

**ஜனாதிபதித் தேர்தல் வெற்றியுடன் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் அரசியல் தலையீடின்றி சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளதாவது:- விளையாட்டுத்துறையில் உலகளவில் சாதனை படைத்த பலர் நம் நாட்டில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கான நலத்திட்டங்கள் எதுவும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

21 ஆம் திகதியின் பின்னர் இந்த நாட்டின் விளையாட்டுத்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். விளையாட்டுத்துறைக்கான தேசிய கொள்கைத் திட்டம் ஒன்றை உருவாக்குவோம். ஆட்சிக்கு வந்து மிகவும் குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் அதனை நடைமுறைப்படுத்துவோம். பாடசாலை வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தேசிய சர்வதேச மட்டத்திலும் விளையாட்டுத்துறையில் உள்ள திறமைசாலிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அதுமாத்திரமல்ல தேசிய விளையாட்டு நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் - என்றார். (ச)

# தேர்தல் கண்காணிப்பு களத்தில் 'ரிக்ரொக்'

கொழும்பு, செப். 14

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தவறான தகவல்கள் பகிரப்படுவதைத் தடுக்க 'ரிக்ரொக்' தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையில், தேர்தல் தொடர்பில் பகிரப்படும் உள்ளடக்கங்களை சரிபார்க்க அங்கீகாரம் பெற்ற நியூஸ்செக்கர் தகவல் சரிபார்த்தல் அமைப்புடன் 'ரிக்ரொக்' கைகோர்த்துள்ளது.

அத்துடன் 'ரிக்ரொக்', இலங்கை தேர்தல் மையத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தேர்தல் மையம் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் தனது சேவையை வழங்குகிறது. வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மையான தேர்தல் முறையை பேணுவதற்கு பாதுகாப்பான அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இந்த தளம் தொடர்ந்து செயற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)


# கசிப்புக் காய்ச்சிய பெண் கைது

கிளிநொச்சி, செப்.14

தருமபுரம் பகுதியில் தனது வீட்டின் பின்புறமாக சூட்சுமமான முறையில் கசிப்பு காய்ச்சிய பெண் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 24 லீற்றர் கசிப்பும், 130 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-45-113)

# துரித உணவுகளால் குழந்தைகள் பாதிப்பு



கொழும்பு, செப். 14

துரிதஉணவுவகைகளைஉண்பதால்சிறுவர்களுக்கு 'அடோபிக் எக்ஸிமா' எனப்படும் ஒருவித ஒவ்வாமை நோய் ஏற்படுவதாக கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் தோல் நோய் மருத்துவர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்துள்ளார். இலங்கையில், சுமார் முப்பது சதவீத சிறுவர்கள் அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயானது மரபணு ரீதியாக பரவக்கூடியது என்பதுடன் ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும். இந்த நோய் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுவதுடன், இளம் பெண்கள் மத்தியிலும் இந்நோய் அபாயம் அதிகம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அதிக விலைக்கு முட்டை விற்றவருக்குச் சிறை

கொழும்பு, செப். 14

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல், மாதவ பிரதேசத்தைச் சேர்ந்த முட்டை வியாபாரிக்கே இந்தத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. (ச)

# பொய்யான செய்தி வெளியீடு யூரியூப்பர் மீது முறைப்பாடு

கொழும்பு, செப்.14

இராணுவப் புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் சண்டிக மாகாதந்திலா தன்னைப் பற்றி அவதூறாக செய்தி வெளியிட்டதாக யூரியூப்பர் ஒருவருக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இராணுவப் புலனாய்வுப்பிரிவைச்சேர்ந்த 200 சிப்பாய்களை அனுப்பி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தான் (இராணுவப் புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர்) நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவுள்ளதாக செய்தியுடன் சம்பந்தப்பட்ட காணொலியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டில் வசித்து வரும் அஜித் தர்மபால என்பவரே இந்தக் காணொலியை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-25-6)




**ம**ரத்தை வெட்டுற வரைக்கும் தான் கோடரிக் காம்புகளுக்கு மதிப்பிருக்கும். அதுக்குப் பிறகு அதை தூக்கி தூர வைச்சுப் போடுவினம். அப்பிடி இஞ்ச ஒரு கோடரிக்காம்பு , போக்கிடம் இல்லாமல் அலைஞ்சு கொண்டிருக்காம். அந்தக் கோடரிக்காம்பை முதலில பாவிச்சது ஒரு ரீவிக்காரர். தானொரு வாள்வெட்டுக் குரூப் காரர் வலியப் போய் பேட்டியெல்லாம் குடுத்து பேமஸான அந்த கோடரிக்காம்பை , அதுக்குப் பிறகு உந்த ராஜபக்ச குடும்பம் தத்தெடுத்தவை. உடனேயே ரீவி முதலாளியை விட்டிட்டு ராஜபக்சக்களோட இந்தக் கோடரிக்காம்பு வந்திட்டுது. பேந்து அவை போடுற எலும்புக்காக இந்தக் கோடரிக்காம்பு விதவிதமான கோமாளிக்கூத்துகளை ஆடி, சனங்களை வெறுப்பேத்த வைக்கிறதையே தொழிலா வைச்சிருந்தது. முக்கியமா ஒவ்வொரு சுதந்திர தினத்துக்கும் கையில காசும், சாராயமும் சிங்கக்கொடியும் குடுத்து ஆக்களைக் கூட்டியந்து பேரணி வைக்கிறது, முள்ளிவாய்க்கால் நினவேந்தல் நடக்கேக்கை இயக்கத்தால் செத்தவை எண்டு பனர் அடிச்சு கட்டி படம் காட்டுறது , சாதிப்பிரச்சினையைத் தூண்டி விடுறது எண்டு என்னென்ன வகையில குழப்பத்தை உண்டாக்க ஏலுமோ அதையெல்லாம் இந்தக் கோடரிக்காம்பு செய்துகொண்டிருந்தது.

தமிழருக்கு எதிரா கருத்துச் சொல்றதையே தன்ர கடமையா வைச்சிருந்த இந்தக் கோடரிக்காம்பு, ராஜபக்சக்களின்ர ஆட்டம் அடங்கினவுடன எங்க போறதெண்டு தெரியாமல் இருந்திச்சுது. அப்பதான் யானைக்கட்சியின்ர பெரும்புள்ளி ஒராள் யாழ்ப்பாணம் வந்து, கோடரிக்காம்பைச் சந்திச்சிருக்கிறார். 'தனக்கு கேட்டதெல்லாம் குடுத்தால் யாழ்ப்பாணச் சனத்தின்ர வாக்கையெல்லாம் அப்பிடியே அள்ளித் தருவன்' எண்டு கோடரிக்காம்பு சொன்னதை அந்த யானைக்காரர் நம்பிட்டார். 'இனி நீதான் யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பு' எண்டு பதவியும் குடுத்திட்டு போன பிறகுதான், கோடரிக்காம்புக்கு இஞ்ச அஞ்சு சதத்துக்கும் மதிப்பில்லை எண்டது அந்த யானைக்காரப் புள்ளிக்கு தெரியவந்திருக்கு. அதால யானைக்காரர் குடுத்த வேகத்திலேயே அந்தப் பதவியை பறிச்சுப்போட்டினம். சரி, கழுதை கெட்டால் குட்டிச் சுவர் தானே எண்டிட்டு, பழையபடி தன்ர ரீவி முதலாளியின்ர காலடிக்கே அந்தக் கோடரிக்காம்பு ஓடியிருக்கு. அந்த ரீவிக்கார முதலாளியும் இப்ப எலக்சன் கேக்கிறதால, எடுபிடி வேலைக்கு தேவை எண்டு ஆளை திரும்பச் சேர்த்திருக்கிறார். ஆனால் முந்தின மாதிரி கவனிப்பில்லை எண்டதால கோடரிக்காம்புக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை.


அதால நாமல் யாழ்ப்பாணம் வரேக்க, அவரின்ர கூட்டம் நடக்கிற மேடையில அம்பது பேரோட ஏறி, 'நாமலுக்கே என்ர ஆதரவு' எண்டு அறிவிக்கப்போறன் எண்டு கோடரிக்காம்பு தூது அனுப்பி இருக்குது. அவ்வளவுதான். நாமல் தரப்பு அலறித்துடிச்சு 'ஐயோ ராசா, நீ ஆதரவு தராமல் இருந்தாலே எங்களுக்கு அது பெரிய உதவி' எண்டு செருப்பால அடிக்காத குறையா ஆளை திருப்பி அனுப்பிட்டுதாம். இப்ப ரீவிக்காரரும் கவனிப்பில்லை, ராஜபக்சக்களும் கையை விட்டிட்டினம் எண்ட கவலையில கோடரிக்காம்பு, உள்ளூர்க் காவிக்காரரே கதியெண்டு கிடக்குதாம். உதுதான் அதிகாரம் இருக்கேக்க கனக்க துள்ளக்கூடாது எண்டு சொல்றது பாருங்கோ.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவமயம்
அழைப்பிதழ்
திரு.திருமதி. குணநேசன் உதயசுதர்சினி தம்பதியரின்
புத்திரியும்
உரும்பிராய் கலைக் கோவில் அதிபர்
கலாபூஷணம் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார்
அவர்களின் மாணவியுமான
செல்வி
யதுர்ஷினி குணநேசன்
அவர்களின்
பரதநாட்டிய அரங்கேற்றம்
15.09.2024
ஞாயிற்றுக்கிழமை - பி.ப 2.00 மணி
யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம்
அனைத்துக் கலை ஆர்வலர்களையும் இந்நிகழ்வில் கலந்து
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
திரு.திருமதி.குணநேசன் உதயசுதர்சினி
உரிமையாளர் - மகா சில்க்ஸ், கவுஸ் ஒவ் செலக்ஷன்

அரங்கப் பிரமுகர்கள்
தலைவர்
"செந்தமிழ் சொல்லருவி"
திரு. சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்
ஆசியுரை
பிரம்மஸ்ரீ மகாதேவ சோமகந்தா சர்மா (வீணை ஆசிரியர்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சிறப்பு விருந்தினர்
திரு. சண்முகராஜா சிவஸ்ரீ
பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்
திருமதி. பிமலாதேவி விமலநாதன்
ஓய்வு நிலை அதிபர், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
திரு.க.மகாலிங்கசிவம் (மாலி)
சிரேஷ்ட பத்திரிகையாளர்
அகில இலங்கை சமாதான நீதவான், உரும்பிராய்
கௌரவ விருந்தினர்கள்
திருமதி சாந்தினி சிவநேசன்
திருமதி யசோதரா விவேகானந்தன்
தலைவர், நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல்நலனில் கவனம் தேவை. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலமும் பணவரவுக்கு வாய்ப்புண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பணவரவுக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உதவி கிடைக்கும். எதிரிகள் பணிந்து போவார்கள். காரியங்களில் சிறுசிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.





வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் நாள் திருக்கைலாய வாகனத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ரி - 27)

## பொதுக்கூட்டமும், நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், செப்.14

காரைநகர் தென்மேற்கு கமக்காரர் அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத்தெரிவும் மற்றும் 2024, 2025ஆம் ஆண்டுக்கான காலபோக கூட்டமும் வியாவில் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

2023 மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான அங்கத்துவம் பெற்றுக் கொள்ளாதவர்கள் கமக்காரர் அமைப்பிடம் அங்கத்துவப் பணத்தை செலுத்தி கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என கமக்காரர் அமைப்பினர் அறிவித்தனர். (ரி)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.14

உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்ற நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவங்களில் 16ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் சந்தை நிகழ்வு அண்மையில் பாடசாலை முதல்வர் கே.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (சு-17)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.14

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் 2024ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்கான அழகுக்கலை மற்றும் சிகையலங்கரிப்பவர் ஆகிய முழு நேரக் கற்கைநெறிகள் பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த ஜூலை மாதம் ஆரம்பமாகின.

இந்தக் கற்கைநெறிகள் தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்கைநெறியை கற்கவிரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் அல்லது பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களை 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தற்கொலை எனப்படுவது தனிநபரின் பிரச்சினையா?

உலக தற்கொலை தடுப்புத்தினம் செப்ரெம்பர் மாதம் 10ஆம் நாள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, இம்முறை தெற்காசிய நாடுகள் இந்தத் தினத்துக்குக் கனதியான முக்கியத்துவத்தை வழங்கி பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால், தேர்தல் பரபரப்புகள் காரணமாக, இலங்கையில் அந்தத் தினம் தொடர்பான பேசுபொருள்கள் எழவேயில்லை. அவ்வாறானதொருதினம் வந்ததும் தெரியாது, போனதும் தெரியாது.

இலங்கையில் ஒவ்வொரு நாளும் பலநூறு பேர் தவறான முடிவெடுத்து உயிரிழக்கின்ற நிலையில், செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு ஆகச்சிறந்த முறையில் அர்த்தம் கற்பித்திருக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பு எம் அனைவருக்கும் இருக்கவே செய்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு இந்த அசிங்கத்தை அபத்தத்தை எங்கள் சூழலில் இருந்து தள்ளிவைக்கலாம். அதைச் செயற்படுத்த வேண்டியது எம் காலக்கடமையும் கூட.

ஆகப்பெரும் அபத்தம் என்னவென்றால், இலங்கையில் தற்கொலை செய்துகொள்பவர்களில் அதிகளவானவர்கள் சிறுவர்களும் இளைஞர்களும் யுவதிகளுமே. பரீட்சைகளால் ஏற்படும் அழுத்தம், மனப் பிறழ்வு, போதைப் பொருள் கலாசாரம், காதல் தோல்வி என இதற்கு எண்ணற்ற காரணங்கள் அடுக்கப்பட்டாலும் அந்தக் காரணங்கள் ஒன்றும் களையப்படக்கூடியவை அல்ல. ஆனால், இன்றெல்லாம், தற்கொலை என்பது தனி நபர்களின் மனநலப் பிரச்சினையாக சுருக்கிப் பார்க்கப் படுகிறது. மாறாக அது தீவிரமான சமூக, பண்பாட்டுப் பிரச்சினை. பிறரின் தலையீட்டினால் பெரும்பாலான தற்கொலைகளைத் தடுத்துவிட முடியும் என்பதே உண்மையும் யதார்தமும். ஆதலால், தவறான முடிவெடுக்கும் நிலையிலுள்ள நபரொருவர், இலகுவில் அணுகக்கூடியவர்களாக எம்மை நாம் வைத்திருக்கின்றோமா? என்ற சுயபரிசீலனை இப்போது அவசியமாகவுள்ளது.

எந்தவொரு உயிரியும் தன் மூதாதேயரிடம் இருந்துதான் தன்னைத் தற்காத்துக்கொள்ள கற்றுக்கொள்ளும். குடும்பத்தினரும் மூதாதையரின் அரவணைப்பும் அன்பும் அக்கறையும்தான் இளைய சமூகத்தினர் நேரிய சீரிய பாதையில் பயணிக்க வழிசமைக்கும். ஆனால், இன்றைய சமூகமோ இணையத்துக்குள் அடைபட்டுவிட்டது. மீண்டெழ முடியாதவாறும் திரும்பிச்செல்ல முடியாதவாறும் அந்தக் கதவுகள் இறுக்கமாகப் பூட்டப்பட்டிருக்கின்றன. இதுவே இன்று அனேகமான தற்கொலைகளுக்குப் பிரதான காரணமுமாகும். இவ்வாறானதொரு பின்னணியில், தற்கொலைகளைத் தடுப்பதற்கு 'பாரம்பரிய அணுகுமுறைகள்' இன்று போதாது என்ற புரிதலை துறைசார் அதிகாரிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இது இருபத்தோராம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டுக்குரிய அணுகுமுறைகளுக்கு நாம் மாறவேண்டியது அவரசமும் அவசியமுமாகும்.

உயிரை மாய்த்தலுக்கு பல காரணிகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றையெல்லாம் தாண்டி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பலர் வாழ்ந்திருக்கின்றனர் வென்றிருக்கின்றனர். இவர்கள் தங்கள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி, உறுதியான உள்ளம் கொண்டவர்களாக வாழ்கின்றனர். அவர்களிடம் இருந்து நாம் வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், தற்கொலைகள் எனப்படுவது தோற்கடிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல: துடைத்தெறியப்பட வேண்டியவையும் கூட.



## முதல் 8 மாதங்களில் வரி வருவாய் உயர்வு

**கொழும்பு, செப். 14**

**2024 ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில் வரி வருவாய் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 28.5% அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் உள்ளதாவது:-

ஜனவரி முதல் ஓகஸ்ட் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,229,245 மில்லியன் ரூபா வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

கடந்த வருடம் இந்தக் காலப்பகுதியில் 956,418 மில்லியன் ரூபாவை சேகரித்தது.

பெருநிறுவன மற்றும் இணைக்கப்படாத வருமான வரி, மதிப்பு கூட்டு வரி, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி, பங்குப் பரிவர்த்தனை வரி மற்றும் பிற வரிகள் போன்ற பல வகையான வரிகளின் கீழ் உள்நாட்டு வருவாய் திணைக்களம் இந்த வரிகளை வசூலித்துள்ளது- என்றுள்ளது. (ச)

## வாக்களிப்பின் பின் பாதுகாப்பு ஏற்பாடு!

கொழும்பு, செப்.14

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களால் வன்முறைகள் உருவாக்கப்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளதாக வாக்களிப்பு நடந்த கையோடு உச்சக்கட்டப் பாதுகாப்பை வழங்குவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் தங்களுக்கு கிடைக்கும் வாக்குகள் தொடர்பில் இப்போது பகிரங்கமாக கருத்துகளை வெளியிட்டுவரும் சில அரசியல் கட்சிகள், தேர்தலின் பின்னர் தாம் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்காத பட்சத்தில் வன்முறைகளைத் தூண்டலாம் என்று அரச புலனாய்வுத்துறை முன்னதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையிலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. (ச)

## கைது 736

கொழும்பு, செப். 14

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 736 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 728 ஆண்களும் 08 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அடுத்த வருடம் வாகன இறக்குமதி

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு பெப்ர வரி மாதத்துக்குள் வாகன இறக்குமதிக் கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு இறக்குமதிக்கான அனுமதி வழங்கப் படும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கையிருப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் ரூபாயிவின் பெறுமதி வலுவடைந்து வருகின்றமை போன்ற காரணங்களால் இவ்வாறு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ச)

## விசேட பஸ் சேவை

கொழும்பு, செப். 14

நீண்ட வார இறுதி விடுமுறைக்காகச் சொந்த இடங்களுக்குச் செல்வோருக்காக நேற்று முதல் விசேட போக்குவரத்துச் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிகமாக சுமார் 60 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேர அட்டவணையின்றி மேலதிக பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## நாளை

15.09.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆவணி - 30

சுபநேரம் : 09.03 - 10.33

ராகுகாலம் : 04.33 - 06.03

பிரதோஷ விரதம்

## நாளொரு நல்வார்த்தை

அவரவருடைய தவறுகளுக்கு அவரவர் சூட்டிக்கொள்ளும் பெயரே அனுபவம்.

- ஒஸ்கார் வைல்ட் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் மண்டபத்தில் வாக்களிப்பு வேண்டாம்

## ஆணைக்குழுவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை, வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு சர்வதேச இந்துமத குருபீடத்தால், தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்ற உன்னத புருஷரைச் சைவத் தமிழ் உலகம் என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாக ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டது. பொதுச் செயற்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும் அதன் புனிதத் தன்மையைப் பேணவேண்டும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம், அங்கு புனிதம் பேணவேண்டிய கட்டாயம், ஆன்மீக ஸ்தலமாக அம்மண்டபம் போற்றப்படவேண்டிய தன்மை மற்றும் ஆசாரங்கள் பேணப்படவேண்டியதன் அவசியம் முதலான இன்னோரன்ன காரணங்களால் கடந்த காலத்து நிர்வாகங்களோடு முரண்பட்டு இன்று வழக்கில் இந்தக் கலாசார மண்டபம் உள்ளது.

தற்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதிக கவனம் எடுத்து இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், தேர்தல் முதலான பொது விடயங்களில் கடமைக்கு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நிச்சயம் அசௌகரியம் ஏற்படும். அது இக்கலாசார மண்டபத்தின் புனிதத்தையும் சட்டதிட்ட நடைமுறைகளையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கும். எனவே, தயவு செய்து இத்தகைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்தும் செயற்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-20,66,27)

# ஆண்டு நிறைவும் முத்தமிழ் விழாவும்


யாழ்ப்பாணம், செப். 14

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அயலில் உள்ள எட்டுப் பாடசாலைகளை இணைத்து முத்தமிழ் விழா யாழ்.கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலையின் ஸ்தாபகர் மருத்துவர் அமரர் அப்பாப்பிள்ளை சின்னத்துரையின் திருவுருவச் சிலை

அவரின் பேரனார் மாணிக்கவாசகர் ஜெயக்குமார், பெறாமகன் சுப்பிரமணியம் விஜயகுமார் ஆகியோரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்தமிழ் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. மலருக்கான வெளியீட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் நிகழ்த்தவுள்ளார். (ச-25)



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 103 ஆவது நினைவுதினம் நல்லூரில் அமைந்துள்ள பாரதி சிலையருகே அண்மையில் நடைபெற்றது. இதன்போது பாரதியார் சிலைக்கு மலர்தூவி, பாடல்கள் பாடி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச)



# தெல்லிப்பழை துர்க்காதேவி பட்டுக்குடைத் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.14

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் பட்டுக்குடைத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இதன்போது அடியவர்கள் புடைசூழ, அழகிய பட்டுக்குடைகள் அணிவகுக்கத் துர்க்கை அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சி நடைபெற்றது. (ச-45-66)





வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் மற்றும் வடமாகாண தந்தை செல்வா அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கும் சமூக சேவகர்களுக்கான கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றன. (ச)

# விற்பனைக் கண்காட்சி!

கிளிநொச்சி, செப்.14

கிண்டர்நோத்ஹில்பெ நிதியுதவியுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் 'வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள்' எனும் தொனிப்பொருளில் விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. விற்பனைக் கண்காட்சியினை கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். கண்காட்சியில் சுய உதவிக் குழுப் பெண்களை வலுப்படுத்தும் நோக்கில், சிறு கைத்தொழில் முயற்சியா ளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சுமார் 40 விற்பனைக் கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தினர். (ரி-113)

# ஆன்மீக சுற்றுலா

யாழ்ப்பாணம், செப். 14

பொன்னாலை வரதராஜப் பெருமாள் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆன்மீக சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவுள்ளனர். காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள ஆன்மீக சுற்றுலாவில் கீரிமலை சிவன்கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம் நல்லூர் முருகன் ஆலயம் ஆகியவற்றை தரிசிக்கவுள்ளனர் மாணவர்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்காக இந்த ஆன்மீக சுற்றுலாவை பொன்னாலை வரதராஜப் பெருமாள் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் எஸ்.கே. தளையரட்ணம் மேற்கொண்டுள்ளார். (ச)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15 . 09 . 1940



மறைவு 13 . 09 . 2024

## திரு ஆறுமுகம் சிவலோகநாதன்

எமது நண்பி திருமதி திருமகள் சத்தியநாதன் அவர்களின் அன்புத் தந்தை திரு ஆறுமுகம் சிவலோகநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் நண்பிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**நண்பர்கள் (1976/1986)**
யா/ கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

(CS 1338) V-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 06 . 1943



இறப்பு 13 . 09 . 2024

## சின்னையா புவனேந்திரம் (புவனம்)

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா புவனேந்திரம் (புவனம்) நேற்று (13.09.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா -வியாழம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற காத்தி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற காந்தரூபியின் அன்புக் கணவரும், சதீஸ்குமார் (அஜேய் புடைவையகம் - மானிப்பாய்), காலஞ்சென்ற சாந்தினி, நந்தினி (ஜேர்மனி), வினோதினி (ஜேர்மனி), நிஷாந்தகுமார் (ரூபி பஷன் - மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, விஜயசிங்கம், ரத்தினசிங்கம், செல்வராசா, கனகலிங்கம், காலஞ்சென்ற வரதராசா, குணராசா (நிரோ பட்டுச்சோலை - சங்கானை) ஆகியோரின் சகோதரரும், ஜேந்தினி (சமுர்த்தி வங்கி - பண்டத்தரிப்பு), சத்தியறஞ்சன், ஸ்ரீரமணன், தயானந்தன், வவிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற துரைராசா, ஆறுமுகம், விஜயராணி, ரஞ்சினி, சந்திரிக்கா, தனேஸ்வரி (ரதி), நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அபினாத் (அஜேய்), தர்மிகா, சயந்தன், கிரியா, நர்மிதா, மதுமிதா, சாருஜன், அபிசன், அஸ்விதா, தர்விஸ், கிருத்திஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது வீட்டில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| சதீஸ்குமார் | : 077 15 41 751 |
| நிஷாந்தக்குமார் | : 077 66 19 665 |
| ஸ்ரீரமணன் | : +49 176 61560 863 |
| தயானந்தன் | : +49 176 427 94196 |

தகவல்:
**குடும்பத்தினர்.**

# படிப்படியாக முன்னேறும் வாய்ப்பை வழங்குங்கள்

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப். 14
மக்களின் வாழ்க்கைச்சுமைப் பாரம் இன்னமும் தளர்த்தப்படவேண்டும். வரிகள் குறைக்கப்படவேண்டும். இதனை முழுமையாக செயற்படுத்தி முடிப்பதற்கு இன்னும் 3,4 வருடங்கள் எடுக்கும். அதற்கான சந்தர்ப்பத்தை - ஒரு வாய்ப்பை கேட்டுத்தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் தவித்தபோது பொறுப்பெடுக்க யாரும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். யாரிடமிருந்தும் நாட்டை நான் கைப்பற்றவில்லை. இந்த நாட்டைப் பொறுப்பெடுக்க யாரும் இருக்கவுமில்லை. இந்த நாட்டை நான் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றிக் கொண்டு வருகின்றேன். இதனை முழுமையாக ஒப்பேற்றுவதற்கான சந்தர்ப்பத்தையே நான் மக்களிடம் கேட்கிறேன்- என்றார். (ச)



# ஜலனி பிரேமதாஸ வவு.வில் பரப்புரை

வவுனியா, செப். 14
சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அவரது மனைவி ஜலனி பிரேமதாஸ நேற்று வவுனியாவில் பரப்புரையில் ஈடுபட்டார். இதன்போது ரிசாத் பதியுதீன், மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிக்க கமகே, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ. ஜெயதிலக ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-110)

# மரக்குற்றிகளுடன் ஒருவர் சிக்கினார்!

வவுனியா, செப்.14
மரக்காலை ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக வெட்டப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒருதொகை மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் மகாறம்பைக்குளம் 2 ஆம் ஒழுங்கை பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. மீட்கப்பட்ட மரங்கள் 15 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடையவை எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்துடன் தொடர்புடைய மரக்காலை உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-110)



# சிறுவர் சந்தை

சாவகச்சேரி, செப். 14
சாவகச்சேரி கிழக்கு மதுவன் முன்பள்ளி சிறுவர் சந்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் வே. கருணாகரன் கலந்து கொண்டார். (ரி-9)


VACANCY
வெள்ளவத்தையில் இயங்கிவரும் பிரபல Construction நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- அனுபவமுள்ள ஓய்வு பெற்ற Civil Engineers (UDA / Building Department)
- அனுபவமுள்ள Assistant Marketing Manager & Marketing Manager
- அனுபவமுள்ள Digital Marketing Manager & Graphic Designer
- அனுபவமுள்ள Assistant Accountant & Accountant

Contact : 077 522 2613
E : info@royalt.lk


# மஹா யக்ஞம்

யாழ்ப்பாணம், செப்.14
ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100ஆவது அவதார தினத்தை முன்னிட்டு காயத்திரி மஹா மந்திர மஹா யக்ஞம் நிகழ்வு ஸ்ரீ சத்ய சாயி அகில உலகப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். மத்தி நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் பி.ப.12.30 மணிவரை நடைபெறவுள்ளது. (ச-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசி வேண்டி சிறப்பு பூசை

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆசி வேண்டி சிறப்பு பூசை வழிபாடுகள் இன்று சனிக் கிழமை மாலை 5.30 மணியளவில் ஈவினை மதுரையம்பதி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ச-66)

## விற்பனைக்கு

பாவித்த சுருக்கு கேற் **10X12**, வீட்டில் பாவித்த தள்ளுகேற் **13'**, என்பன விற்பனைக்கு உண்டு.

**இடம்** : **350**, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
**தொடர்பு** : காலை **8.00** மணி தொடக்கம் மாலை **6.00** மணி வரை

**077 498 0404**

## ஆறாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

**மண்ணில்**
04 . 03 . 1934



**விண்ணில்**
14 . 09 . 2018

### அமரர் சவேரியாப்பிள்ளை பிலிப்பு

ஆண்டு ஆறு சென்றதுவோ
எம் பாசமிகு அம்மாவின்
அன்பு முகம் கண்டு
அவனியில் எம் வாழ்வு
சிறக்க தன் உதிரத்தை
பாலாக தந்து இனிய மொழி
பேசி அமுதூட்டி வளர்த்த
எங்கள் தாயை நன்றி உணர்வுடன்
நினைவு கூருகின்றோம் இந்நாளில்
அவரது இவ்வுலக பாவங்களை மன்னித்து
விண்ணக இன்பத்தில் அவர் அமைதி
பெற இறையருள் வேண்டுகின்றோம்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

(CS/56185) J-1

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
1974 . ஏப்ரல் . 14



**மறைவு**
2024 . செப்ரெம்பர் . 07

எமது நண்பன் **திரு.சு.உதயசிறி** அவர்களின் அன்புத் தங்கை

### திருமதி உதயகுமாரி தயாரூபன் (அமுதா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் நண்பனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நண்பர்கள் 1976/86**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
15 . 08 . 1945



**மறைவு**
11 . 09 . 2024

### இராசையா பாலசிங்கம்

**(ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர் யாழ்/ போதனா வைத்தியசாலை)**

வேலன்குளத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தி நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசிங்கம் அவர்கள் கடந்த (11.09.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், தயாளன், குணாளன், தயாபரன், பத்மராணி, லோகராணி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், அமரர் தவராசா, தெய்வேந்திரம்பிள்ளை, தனலட்சுமி, சறோஜா, சிவானந்தம், அமரர் தனபாலசிங்கம், கோணேசமூர்த்தி, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன் (கதிரியியலாளர் யாழ்/போதனா வைத்தியசாலை), அமரர் பிரதீபா, சுதர்சன் (இத்தாலி), வசீகரன், கிரிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யாழினி (ஆசிரியர் யாழ்/ஊர் புனித மரியாள் றோ.க.ம. வித்தியாலயம்), ஜெயராசலிங்கம், வித்தியா, நிறைஞ்சனா, அபிராணி ஆகியோரின் மாமனாரும், அகர்ஷன், சாய்சரண், அக்ஷரா, கியூஷா, அனுஷ், லபினாஷ், ஹர்ஷிதா, லதனியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீவியாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேவலி மத்தி,**
**நீர்வேலி.**

(CS/1336) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### கமலாம்பிகை நடேசன் (Baby)

நீர்வேலியை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை நடேசன் அவர்கள் கடந்த 10.09.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நடேசன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தையல்நாயகி தம்பதியரின் மருமகளும், பானுமதி (இராசாத்தி - கனடா), வசந்தி (பாப்பா சொய்சாபுர), அமிர்தகௌரி (பவானி அவுஸ்திரேலியா), முரளிதரன் (கோபி - அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும், ஆனந்தரட்ணம், சூரியகுமார், திருவருள்வள்ளல், கௌரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற குமரேசன் (USA) அவர்களின் மைத்துனியும், வாகீஸ்வரி (USA) அவர்களின் உடன்பிறவா சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பிற்பகல் 5.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/28598) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திருமதி டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்



எம் உயிரில் ஒன்றாய் கலந்து
எம் துயரத்தை போக்க வந்தீர்களே அம்மா!
ஆனால் எம்மை துயரத்தில் ஆழ்த்தி
விட்டு போனீர்களே அம்மா!
ஆண்டுகள் மூன்று ஆனதம்மா!
உம் பிரிவு தந்த சோகங்கள்,
வடுக்களாய் நெஞ்சமதில் என்ன சொல்லி
ஆறுவது மனதிலே எப்போதும் அழியாத
உங்கள் நினைவுகள் நாதமாய் இசைமீட்டி
நிற்குதம்மா என்றும் உந்தன்
நினைவுகளுடன்!

அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

(CS/56187) J-1

தொடர்புகளுக்கு:
மாலதி- +447 908 020 084
சந்திரகுமார் +1(613)2660411

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாய் மடியினில் 09.09.1933
அரன் அடியினில் 16.09.2021
திதி: 14.09.2024

# யோகா கற்கை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.14

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படைக் கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணிவரை நடைபெறும்.

இந்த யோகக்கலையில் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும், மேலதிக தகவல்களை 021222 2203 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ள முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ரி)



# யாழ்.மாவட்டச் செயலருடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவினர், யாழ்.மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான ம. பிரதீபனை மாவட்டச் செயலர் அலுவலகத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் நீண்டகால கண்காணிப்பாளர் நிக்கோலஸ் குசூலிஸ் மற்றும் எம்.எஸ். ஜோஹான்னா வான் சம்பீக் மற்றும் எம்.எஸ். மாதுமை பரந்தாமன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9,66,27)

# கழிவுகளால் துர்நாற்றம்!

யாழ்ப்பாணம், செப். 14

கோப்பாய்- கைதடி வீதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகப் பாதசாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளையில் சிலர் இந்தப் பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டிவிட்டு செல்கின்றனர். கழிவுகளைப் பறவைகள் மற்றும் விலங்குகள் இழுத்துச் செல்வதால், சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது என்றும் பாதசாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-17)

# மீனவர்களின் கேள்வியால் திணறிய அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 14

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் பரப்புரை முன்னெடுப்பதற்கு சுப்பர்மடம் கிராமத்துக்குச் சென்றிருந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அப்பகுதி மீனவர்கள் எழுப்பிய சரமாரி கேள்விக்குப் பதிலளிக்கமுடியாமல் அங்கிருந்து நகர்ந்து சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வடமராட்சியில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இதன்போது பருத்தித்துறை சுப்பர்மடம் கிராமத்துக்கு பிற்பகல் 4 மணியளவில் கட்சிப் பிரமுகர்கள், பாதுகாவலர்கள் சகிதம் வருகைதந்து அங்கிருந்த மீனவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டிருந்தார். எனக்காக அல்லாமல் நான் கேட்கின்றேன் என்பதற்காக இல்லாது நீங்களாகவே ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதனைக் கருத்தில் எடுக்காத மீனவர்கள் சுருக்குவலை, கணவாய் குலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்கள் வடமராட்சிக் கடலில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் அதனால் கடற்றொழிலை மேற்கொள்ளமுடியாது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆதங்கத்தை வெளிப்படுத்தியதுடன் அமைச்சருக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இதன்போது மீனவர்களது கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது சில நிமிடங்களிலேயே அவ்விடத்தில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசரமாக வெளியேறினார். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞரொருவர் சடலமாக மீட்பு!

கொடிகாமம், செப். 14

இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் மரண விசாரணையை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-159)

# உலகளாவிய தரத்துக்கான தொழிற்பயிற்சிக்கு நிதியுதவி

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப். 14

**உலகளாவிய தரத்துக்கேற்ப உயர் கல்வி வாய்ப்புகளைப் பெறும் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் அரச மற்றும் தனியார் துறையில் பல புதிய கல்வி நிறுவனங்கள் நாட்டில் ஸ்தாபிக்கப்படும்.**

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடாக தொழில் பயிற்சி வழங்க அரசாங்கம் நிதியுதவி அளிக்கவுள்ளது.

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லவேண்டுமானால், 21ஆம் நூற்றாண்டின் மத்தியில் எதிர்காலத்தை நோக்கிச் செல்வதாயின், எமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய அறிவு தேவைப்படுகிறது.

எதிர்காலத்தில் இதுபோன்ற பல நிறுவனங்கள் உருவாக்கப்படவேண்டும். இளைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடாக தொழில் பயிற்சி வழங்க அரசாங்கம் நிதியுதவி அளிக்கவுள்ளது. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இவ்வாறான நிறுவனங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றும் திறன் எங்களிடம் உள்ளது. மேலும் நாம் உருவாக்க நினைக்கும் டிஜிற்றல் பொருளாதாரத்துக்கு. இதுபோன்ற நிறுவனங்கள் அவசியம் - என்றார். (ச-இ)



# கலந்துரையாடல்

கிளிநொச்சி, செப்.14

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சிவில் சமூகங்களின் பிரதேச சம்மேளனம் ஸ்தாபித்தல் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.


நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், அரச சார்பற்ற நிறுவனங்கள், பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-9)



# ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 320 ஆவது ஆவணி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் ஸ்ரீ நடராஜா ஞானச்சுடர் சஞ்சிகையின் ஆவணி மாத இதழின் வெளியீட்டுரை மற்றும் மதிப்பீட்டுரையை ஆற்றினார். (ச-66)



# திருவிழாத் திருப்பலி!

கிளிநொச்சி, செப். 14

முகமாலை தூய ஆரோக்கிய மாதாவின் திருவிழாத் திருப்பலி நாளை காலை 6.45 மணிக்கு, யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது. (ம-9)

# விவசாயக் குழுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, நீர்ப்பாசனக் குளங்களின் தற்போதைய நிலைமைகள், சிறுபோக பயிர்ச்செய்கை, துறைசார்ந்த திணைக்களங்களி னால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (ச-25-13)





# ஒட்டுசுட்டான் ம. வித்தி ஆண்டு கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், செப்.14

கற்சிலைமடு பண்டாரவன்னியன் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய 90 ஆம் ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் வி.பன்னீர் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது புதிதாக அமைக்கப்பட்ட வள்ளுவர் சிலையும், பண்டாரவன்னியனின் உருவச்சிலையும் திரைநீக்கம் செய்யப்பட்டதோடு மரக்கன்றும் நடுகை செய்யப்பட்டன.

முன்னாள் வித்தியாலய முதல்வர்களான சு.பரந்தாமன், பொ.அருமைச்சந்திரன், திருமதி சிவநேசன், பழைய மாணவர்கள் மற்றும் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஜெயகதீஸன் கலந்துகொண்டார். (ச-25-500)

ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ். கிளையின் ஏற்பாட்டில் உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை தற்கொலை தடுப்பு சுலோகங்களை தாங்கியவாறு விழிப்புணர்வு நடைபவனி வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து கே.கே.எஸ்.வீதி வழியாக சத்திரச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். பஸ் நிலைய முன்றலை சென்றடைந்து அங்கு கவனவீர்ப்பு இடம்பெற்றது. (ச-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப் புத் தொடர்பில், ஜனாதிபதி வேட்பாளர் கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித மான கருத்துகளைத் தெரிவித்துவரும் பின்னணியிலேயே, செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிப தித் தேர்தலின் பின்னரே, இலங்கைக் கான கடன் வழங்கலின் மூன்றாம்கட்ட மதிப்பாய்வுகள் இடம்பெறும் என்று சர்வ தேச நாணய நிதியத்தின் செய்தித் தொடர் பாளர் ஜூலி கோஸாக் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜூலி கோஸாக் மேலும் தெரிவித்ததாவது:-

மிக மோசமான நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு வேலைத்திட் டங்களின் நோக்கங்களை அடைவது ஒரு முக்கியமான படிநிலையாகும். இலங்கையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நாடு இன்னும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை. கடி னமான முயற்சிகளை மேற்கொண்டு கண்டுகொண்ட வெற்றிகளைப் பாது காப்பது இலங்கைக்கு முக்கியமானது. இலங்கையின் எதிர்காலத் தேர்தலை பொறுத்தவரை அதனை இலங்கை மக் களே தீர்மானிக்கவேண்டும். ஆனால் மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்ப ளிக்கவும், அதற்கு இணக்கமான முறை யில் செயற்படவும் நாணய நிதியம் தயா ராகவே உள்ளது" - என்றார்.

(அ-ம-ச-சி-20)

## அறத்...

தெரிவின் பிரதிபலிப்பே என்று வடக்கு - கிழக்கின் நீதிக்கும் சமாதானத்துக்கு மான குருக்கள், துறவிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

"மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கின்றது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பா ளர்கள் பற்றிய அரசியல் அறிவு, அவர் களின் தனி - கூட்டு இறந்தகால வரலாற் றுடன்தான் எமக்கு முன்புள்ள தெரிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு தூரம் நம்பிக்கை தருவதாக உள்ளது என்பதை அடிக் கோடு காட்டவேண்டிய தேவை இல்லை. இந்த ஜனாதிபதித் தேர் தல்கூடஒற்றையாட்சி அரசமைப்புச் சட் டத்தின் அடிப்படையிலேயே நடத்தப்படு கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிங்கள - பௌத்த மேலா திக்கத்தை முன்னிலைப்படுத்தியே ஜனா திபதி மேடையை அலங்கரிக்கின்றனர். ஈழத்தமிழர்களின் கூட்டு அரசியல் வேண வாவையும், தமிழினப் படுகொலையை யும் மறுக்கின்ற சூழலில் ஜனாதிபதி வேட் பாளர்கள் ஒன்றுபட்டிருக்கின்றார்கள். தமிழர் தாயகம் தொடர்ந்து தமிழ்த் தேசிய நீக்கத்துக்குள் தள்ளப்பட்டுக்கொண்டி ருக்கின்றது. இது வெவ்வேறு வடிவங் களை பரிணாமங்களைக் கொண்டுள் ளது.

இவ்வாறானதொரு காலச்சூழமைவில் அரசியல் அறத்தெரிவாகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் எமக்கு முன்பாக நிறுத் தப்பட்டுள்ளார். ஈழத்தமிழர்களின் ஒற்று மையின் அடையாளமாகவும் அவர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த முக்கியமான தருணத்தில் ஈழத்தமிழர்களின் தெரிவு அவர்களின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என நம்புகின்றோம்" - என்றுள்ளது.

(அ-ம)

## அரசியல்...

மானால் அவருக்குத் தமிழ் மக்கள் யாரும் வாக்களிக்கக் கூடாது என இலங் கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார். கொழும்பிலிருந்து ஒளிபரப்பா கும் தொலைக்காட்சியின் விவாத நிகழ்ச் சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்ப் பொதுவேட்பாளர் என்கிற அரசி யல் தற்கொலை நிகழ்ச்சிநிரலில் இருந்து தமிழ் மக்கள் காப்பாற்றப்பட வேண்டு மானால் பிரதான தமிழ் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இதற்கு ஆத ரவளிக்கவில்லை என்று இருக்கவேண் டும். அது ஏற்கெனவே நடைபெற்றுள் ளது. கட்சியின் உயர் முடிவெடுக்கும் சபையான மத்திய செயற்குழு மிகப்பெரிய பெரும்பான்மையோடு அவரை ஆதரிப் பதில்லை என்றும், அரியநேந்திரன் தேர்தலில் இருந்து விலகவேண்டும் என்றும் தீர்மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளது.

மேலும், ஆகக் குறைந்த வாக்குகள் தான் பொதுவேட்பாளருக்குக் கிடைக்க வேண்டும். கடந்த காலத்தில் சிவாஜிலிங் கத்துக்கு கிடைத்த வாக்குகளைப் போன்று இருக்கவேண்டும். தமிழ் மக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஒரு பொருட்டாகவே கணிக்கவில்லை என்றிருக்கவேண்டும். அதைப்பற்றிக் கருத்தில் கொள்ளவே முடியாதளவுக்கு வாக்கு எடுத்தால் மாத் திரம்தான் தமிழ் மக்கள் மிகப்பெரிய ஆபத்திலிருந்து தப்பமுடியும்" - என் றார்.

(அ-ஒ-இ)

## 18ஆம்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெ டுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. குறித்த தினத்தில் மாலை 4 மணிவரை வாக்க ளிக்க முடியும். இதற்காக நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 417 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(அ-ச-இ)

## ஜனாதிபதி...

தொடர்ச்சியாகப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் ஜனாதி பதி ரணில் இன்று மீண்டும் யாழ்ப்பா ணத்துக்கு வருகை தரவுள்ளார். ஒரு வாரத்துக்குள் இரண்டாவது தடவையாக அவர் யாழ்ப்பாணம் வருகைதரவுள் ளார். யாழ்ப்பாணத்தில் இன்று பல்வேறு பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன், தேர்தல் பரப்புரைகளிலும் பங்கெடுக்க வுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

(அ-ம-26-20)

## நவம்பர்...

ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந் தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் ராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபே றுகளை இன்னும் இரண்டு வாரங்களுக் குள் வெளியிட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம-66)

## பொலிஸ்...

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும், புங்குடுதீவுப் பகுதியை சேர்ந்த பு.கண்ணதாசன் (வயது-32) எனும் பொலிஸ் உத்தியோகத்தரே உயி ரிழந்தவராவார்.

வேலணையில் இருந்து அராலியை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்த போது, பிறிதொரு மோட்டார்சைக்கிளு டன் மோதி எதிரே வந்த ஜே.சி.பி. வாக னத்தினுள் அகப்பட்டு சம்பவ இடத்தி லேயே அவர் உயிரிழந்துள்ளார். விபத் துத் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ம-20-26)

## சஜித்...

யாழ்ப்பாணம் - மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் தேர்தல் பரப்புரை உட்பட பல்வே றுபட்ட தேர்தல் பரப்புரைகளிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

(அ-ம-26)

## திலீபனை...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன் னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டே இந்தத் தடையுத்தரவு கோரப்பட்டுள்ளது. இதையடுத்து, இது தொடர்பான விசார ணைகளுக்காக அவர்களை அழைக்கு மாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் அறி வுறுத்தியுள்ளது.

(அ-ம-26-20)

## மிலேச்சத்தனம்...

பெற்ற வன்முறை காரணமாக பல்க லைக்கழகம் மூடப்பட்டிருக்கின்றது. பல சமூக அமைப்புகளின் கலந்துரையாடல் கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந் தர்ப்பத்தில் இந்த மிலேச்சத்தன மான தாக்குதல் இடம் பெற்றிருக் கின்றது.

தற்பொழுது நாட்டைத் தீ மூட் டிய குழுவும், வங் குரோத்தடையைச் செய்த குழுவுக்குப் பாதுகாப்பு வழங்கு கின்றவர்களும் ஒன்றாக இணைந் துள்ளார்கள். ரணி லும் அநுரவும் அர சியல் திருமணம் செய்து கொண்டு இன்று தேனி லவை கொண்டா டிக் கொண்டிருக்கி றார்கள். இந்தத் தேனிலவுக் கொண்டாட்டத்தை நிறுத்தவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி விவசாயக் கடனை இரத்துச்செய்வதால் அநுரவும் ரணிலும் அதற்கு எதிராக ஒன்றிணைந்துள்ளனர். குறைந்த விலையில் உரம் வழங்குவதற் கும், வீடுகளை அமைத்துக் கொடுப்பதற் கும், எரிபொருள் நிவாரணம் வழங்கப்ப டுவதற்கும், இவர்கள் எதிராக இருக்கின் றமையாலே தற்பொழுது தமக்குள் ஒன்றாக இணைந்துள்ளனர். எனவே இந்த ரணில், அநுர ஆகியோரின் தந்தி ரக் கூட்டைத் தோல்வி அடையச் செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(அ-ம)

## தெல்...

இன்று அதிகாலை 5 மணியளவில் உஷக்காலப் பூசை, அதிகாலை 5.30 மணியளவில் ஸ்நபன அபிஷேகம், காலை 6.15 மணியளவில் காலைச்சந் திப் பூசை, காலை 6.45 மணியளவில் கொடித்தம்பப் பூசை, காலை 7.30 மணி யளவில் வசந்தமண்டபப் பூசை வழிபா டுகள் என்பன நடைபெற்றுத் தொடர்ந்து துர்க்கை அம்பாள் ஆலய உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளிச் சித்திரத் தேரில் ஆரோகணிப்பாள். அதனைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் சித் திரத்தேர் பவனி ஆரம்பமாகும்.

இதேவேளை - ஆவணி ஓண நன்னா ளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் துர்க்கா புஷ்கரணித் தீர்த்தக் கேணியில் தீர்த்தத்திருவிழாவும், நாளை மாலை 6 மணியளவில் கொடி யிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளது.

(அ-ம-66-20)

## சங்கானை...

அவருக்கு இந்தப் பரிசுப் பொதி கிடைத் துள்ளது. அவர் ஓர் ஆங்கில எழுத்துத் தவறியதால் இரண்டரைக் கோடி ரூபா வைத் தவறிட்டுள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் சகீஜன் என்ற முகவரிடமே இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு வெல்லப்பட்டுள்ளது. குறித்த விற் பனை முகவரினால் ஏற்கனவே இரண்டு தடவைகள் இரு கோடீஸ்வர அதிர்ஷ்ட சாலிகள் உருவாக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

(அ-ம)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பர் வீதி
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தொடர்பு : 077 623 4204 / 077 030 2523

(CS 1339) V-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108 வருடங்களின் முன்னர் தூக்கிலிடப்பட்ட

# எட்வர்ட் ஹென்றிக்கு ஜனாதிபதி மன்னிப்பு

கொழும்பு, செப். 14

108 வருடங்களுக்கு முன்னர் தூக்கிலிடப்பட்ட எட்வர்ட் ஹென்றிக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலவரங்களில் பங்கேற்று அரசாங்கத்துக்கு துரோகம் இழைத்தார் என்று குற்றச்சாட்டு தியுனுகே எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தது. 1915ஆம் ஆண்டு ஜுன் 25ஆம் திகதி இலங்கை ஆளுநரால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் தவறான விசாரணையைத் தொடர்ந்து, 1915ஆம் ஆண்டு ஜுலை 7ஆம் திகதி தனது 27ஆவது வயதில் எட்வர்ட் ஹென்றி தூக்கிலிடப்பட்டார். பல்வேறுபட்ட மேன்முறையீடுகள் இருந்தபோதிலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. 108 ஆண்டுகளுக்கு முன்னர், காலனித்துவ நீதிமன்றத்தால் தூக்கிலிடப்பட்ட எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸுக்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அமைச்சரவையும் அதற்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. இதைத் தொடர்ந்தே அவருக்கு தற்போது பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-ச)


## வீடு வாடகைக்குத் தேவை

4 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ் நகரை அண்டிய பகுதி, நல்லூர், TCT யை அண்டிய பகுதி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

(CS/56199) J-1

077 783 7434

## நல்லூரில் காணி விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் (Temple Road) க்கு அருகில் 1.1/4, பரப்பு காணி விற்பனைக்கு மற்றும் Colombo வெள்ளவத்தையில் 840, 1000, 1350 Sqft Apartments, பம்பலப் பிட்டியில் 1700 Sqft Apt. தெஹிவளையில் 1200 Sqft 3BR கல்கிசையில் 3p. 11p தனி வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 115 3715

## இயற்கை எழிலுடன் கூடிய உரும்பிராய் மத்தியில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு



- முதல் பதிவு செய்யப்படும் ஐந்து துண்டுகளுக்கு இலவசமாக குழாய்க் கிணறு அடித்து தரப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
- தரகர் தேவையில்லை
- உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு மிக அருகாமையாக உள்ளது. மற்றும் வங்கிகள் வணிக கட்டடங்கள் உணவகங்கள்.
- உரும்பிராய் சந்தையில் இருந்து 600 மீற்றர் தொலைவிலும், உரும்பிராய் நிரந்தராமட வீதியில் இருந்து 400 மீற்றர் தொலைவிலும் உள்ளது.
- உங்களுக்குப் பிடித்தமான காணித் துண்டுகளை இன்றே பதிவு செய்வதற்குஅழையுங்கள்

077 132 9682

## காணி, வீடு விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில. பர. 3 குளி 8.50 அளவுள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

(CS/31161) J-1

077 967 2152, 077 902 4248

## காணி விற்பனைக்கு

யாழ் சாவகச்சேரியில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A9 வீதியில் இருந்து கல்வயல் சொல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- A9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- சாவகச்சேரி பஸ் நிலையம் 1 1/2 k.m தூரம்
- சாவகச்சேரி மகளிர் பாடசாலை 1 k.m தூரம்

தொடர்புகளுக்கு:

077 294 1521, 077 329 4130

## TAMIL / ENGLISH

| A/L | O/L |
|---|---|
| பொருளியல், Economics 2025 and 2026 Repeated Batch | வணிக கல்வியும், கணக்கீடும் |

CALL / Whatsapp

076 991 3255

## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

விலை 7000 ரூபாவிலிருந்து

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க் . என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

N5 எலக்ரிக்கல்ஸ்

- 077, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

Hotline : 071535 7799/ 071 554 7973

## New City கோழி Farm

34 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள், முட்டைகள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- 24 மணிநேர சேவை
- புறோயிலர் இறைச்சி (சில்லறை - 1000/- 10KG க்கு மேல் - 950/-)
- உயிருடன் புறோயிலர் 1 Kg - 620/-
- உயிருடன் தேவைப்படுபவர்கள் முதல் நாள் (காலை 10 மணிக்கு முன்பு) பதிவு செய்யவும்.

New Citity கோழி பார்ம்

சின்னக்கடை மார்க்கட் முன்பாக, குருநகர், யாழ்ப்பாணம்.

(CS/11341) J-1

Call: 077 385 6224

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு மேற்படி வேலையாட்கள் தேவைப் படுகின்றனர்.

1. உதவி தகவல் தொழிநுட்பவியலாளர் (Assistant IT Officer)
2. எரிபொருள் நிரப்பு நிலைய மேற்பார்வையாளர் (Lanka Fuel Mart Supervisor)
3. எரிபொருள் நிரப்புநர் (Lanka Fuel Mart Pumber)
4. கணக்காளர் (Accountant) எரிபொருள் நிலையம் - வவுனியா.
5. முகாமையாளர் (Manager) எரிபொருள் நிலையம் - வவுனியா.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்:

0777 391 221

சுயவிபரக் கோவைகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல்:

jaffna@lionagents.lk


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 03 . 1940 | 13 . 09 . 2024 |

**தேவராசா இராசம்மா (திலகம்)**

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், 10ம் வாய்க்கால் உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட தேவராசா இராசம்மா (திலகம்) அவர்கள் நேற்று (13.09.2024) வெள்ளிக்கிழமை யாழ்பாணத்தில் காலமானார்.

அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - காமாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காரைநகர் - உருத்திரபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தேவராசாவின் அன்பு மனைவியும், கால்ஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லத்துரை, ஞானாம்பாள், சதாசிவம், கனகம்மா மற்றும் பரமலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரரின் இல்லத்தில் நாளை (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

V.P. பாலசிங்கம் (சகோதரர்)

371, கோவில் வீதி,
நல்லூர்.

077 340 3027

(CS/56202) J-1

செய்தி :021 493 0000 - விளம்பரம்:021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org